**I.A.No.6/2026 in OS 178/2015**

நாள் : 21.07.2026

உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

இம்மனுவானது, கடந்த 02.09.2025 அன்று பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9, விதி 7 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கை வாதிகள் விளம்புகை, ஏவுகட்டளை மற்றும் வலியுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்து அதில் தனது தகப்பனாரான 1ம் பிரதிவாதி ஆஜராகி நடத்தி வந்த நிலையில் மேற்படியார் காலமான பின்பு 2 முதல் 4 பிரதிவாதிகளுக்காக தானே முன்னின்று இந்நீதிமன்றத்தில் வழக்கினை நடத்தி வந்த நிலையில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 02.09.2025 அன்று கடைசி வாய்தா ஏற்பட்டிருந்ததாகவும், மேற்படி வாய்தா தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தனக்கு மஞ்சள் காமாலை ஏற்பட்டு இயற்கை வைத்தியம் பெறுவதற்காக காரையாறு சென்றுவிட்டபடியால் தன்னால் தனது வழக்கறிஞரை நேரில் சந்தித்து குறுக்கு விசாரணை செய்வதற்கான விபரங்களைக் கூற இயலாமல் போய்விட்டதாகவும், இதனால் இந்நீதிமன்றத்தில் பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜரில்லை என்பதால் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்சமாக நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது என்றும், இந்நிலையில், எதிர்மனுதாரர்கள் தரப்பு சீர்திருத்த பிராது தாக்கல் செய்து அதில் பிரதிவாதிகள் ஆஜராவதற்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்து அதில் தாங்கள் ஆஜராகி வந்தநிலையில், மேற்படி 02.09.2025 அன்று வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் மனுதாரர்கள் வழக்கறிஞர் மூலம் தெரியவந்தது என்றும், மேற்படி தினத்தில் மனுதாரர்கள் ஆஜராகாமல் இருந்தது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், அது தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும் என்றும், இந்த நிலையில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை

ரத்து செய்து மீண்டும் பிரதான வழக்கினை நடத்திட உத்தரவிட வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்வதாகவும், மனு அனுமதிக்கப்படாத பட்சத்தில் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் காலம் கடந்து இந்த வம்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரர்களுக்கு 1ம் எதிர்மனுதாரரைக் குறுக்கு விசாரணை செய்வதற்காக இந்நீதிமன்றம் போதிய கால அவகாசம் கொடுத்தும் 1ம் மனுதாரரைக் குறுக்கு விசாரணை செய்யாமல் மேற்படி மனுதாரர்களை பொறுத்து இந்நீதிமன்றம் 02.09.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவை பிறப்பித்தது என்றும், ஏற்கனவே பிரதான வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் 18 வயது பூர்த்தி அடைந்ததைப் பதிவு செய்து கொள்ள வேண்டி வ.வி.எண்.4/2024 என்ற மனுவை தாக்கல் செய்து இந்நீதிமன்றம் 08.08.2024 அன்று அனுமதித்து உத்தரவிட்டது என்றும், மேற்படி 08.08.2024 அன்று மனுதாரர்கள் மேற்படி வ.வி.எண்.4/2024 என்ற மனுவிற்கு எதிருரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்த நிலைமையில் அன்றைய தினம் எதிருரை தாக்கல் செய்யாமல் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், ஆனால் மனுதாரர்கள் 02.09.2025 அன்று வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் அதற்கு ஒரு வார காலத்திற்கு முன்பாக மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு வைத்தியம் பார்ப்பதற்காக காரையாறு சென்றுவிட்டதாக அப்பட்டமாக இந்நீதிமன்றத்தை ஏமாற்றும் பொய்யான சங்கதிகளோடு இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த மனுதாரர்கள் கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமலும் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாமலும் இருந்து கொண்டு தற்போது பிரதான வழக்கை மேல்நடத்த தயாராக இருப்பதாக கூறுவது இந்நீதிமன்றத்தை ஏமாற்றும் செயலாகும் என்றும், இந்த மனுதாரர்களுக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து சென்ற அழைப்பாணைகளை பெற்று கொண்டு ஒவ்வொரு

மனுவிலும் பலமுறை ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், ஆனால் மேற்படி மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை மறைத்து தற்போது இந்த மனுவை தாக்கல் செய்வது சட்டப்படி நிலைக்கத்தக்கதில்லை என்றும், பிரதான மனுவை தள்ளுபடி செய்ய வேண்டியது நீதியின் பொருட்டும் நியாயத்தின் பொருட்டும் அவசியமாய் இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது, மனுதாரர்கள்/வாதிகளால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிராது 2ம் தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை, நிரந்தர ஏவுகட்டளை மற்றும் வலியுறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், அசல் வழக்கில் வாதி தரப்பு வாதுரை கேட்பதற்காக வாய்தா போடப்பட்ட நிலையில், 02.09.2025ம் தேதியில் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், 16.06.2025 முதல் 02.09.2025 வரை வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது என்பதையும், 02.09.2025ம் தேதி வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக கட்டாய வாய்தா போடப்பட்ட நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் இருந்து வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யாததாலும், அது தொடர்பாக எந்த எடுத்துரைப்பும் நீதிமன்றத்தில் முன் வைக்காததாலும், 2 முதல் 5 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டனர் என்பதையும், அவ்வாறு அழைக்கப்பட்டும் ஆஜராகததால் அவர்களுக்கு எதிராக 02.09.2025ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதையும் அறிய முடிகிறது.

மனு மற்றும் எதிருரை பரிசீலிக்கப்பட்டன. அவற்றை பரிசீலித்ததிலிருந்து மனுவில் மனுதாரர்கள் 02.09.2025ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகி வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலாததற்காக தெரிவித்துள்ள காரணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கவை

என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு அவர்களது தரப்பு வழக்கை நிரூபிப்பதற்கு ஒரு வாய்ப்பளிக்கவேண்டுமென்றும், அவ்வாறு வாய்ப்பளிப்பது வழக்கில் வனையப்பட்டுள்ள எழுவினாக்களுக்கு இறுதியான தீர்முடிவு காண்பதற்கு அவசியம் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனினும், அவ்வாறு வாய்ப்பளிப்பதனால், எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படும் காலவிரையத்தைக் கருத்தில் கொண்டும், மனுதாரர்களுக்கு வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட காலஅவகாசத்தைக் கருத்தில் கொண்டும், இம்மனுவை கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இம்மனுவில் 2 முதல் 5 மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஒவ்வொருவரும் தலா ரூ.1000/—ஐ எதிர்மனுதார்கள்/வாதிகளுக்கு செலவு தொகையாக வருகின்ற 29.07.2026 தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மனு மீண்டும் அழைக்கப்படும் நாள்.30.07.2026. அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்ட நிலையில், இம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளதால் காலதாமதம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று கருதி, இந்நீதிமன்றம் தெரிவிக்கும் அடுத்த வாய்தா தேதி (30.07.2026) அன்று மனுதாரர்கள் வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவேண்டுமென்றும், அவ்வாறு செய்யத் தவறினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட இவ்வாய்ப்பு முடித்து வைக்கப்படும் என்றும், உத்தரவிடப்படுகிறது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.07.21 12:38:55 +0300

கூ.மா.உ.நீ.
சங்கரன்கோவில்.
21/07/2026